96

# பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் பங்கெடுப்பது எப்படி..






மேற்பார்வை :
உ. குமரன்,
சமுதாய மற்றும் குடும்ப
மருத்துவ பிரிவு,
யாழ் பல்கலைக்கழகம்.

வி. சிந்துஜன்,
32ம் அணி,
மருத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

## பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் ஈடுபாடு

•பிள்ளைகள் 70% ஆன நேரம் (தூக்கம் தவிர்ந்த) பாடசாலைக்கு வெளியே உள்ளனர். இவற்றில் அதிகமான நேரம் பெற்றோர் உடனிருப்பர்.

•பெற்றோர் ஆரம்பநிலையிலேயே பிள்ளைகளின் கல்வியில் ஈடுபாடு செலுத்தல் சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும்.

•பெற்றோரின் ஈடுபாடு இல்லாமை பாடசாலைகள் எதிர்நோக்கும் மிகமுக்கியமான பிரச்சினை ஆகும்.

**பல வருட ஆராய்ச்சிகளில் பெற்றோரின் ஈடுபாடு :**

- உயர் பெறுபேறுகள், சித்திகள்
- சிறந்த பாடசாலை வருகை
- சிறந்த ஊக்கம், தன்னம்பிக்கை
- மது மற்றும் போதை மருந்து பாவனை குறைவு
- வன்முறையில் ஈடுபடுதல் குறைவு

போன்ற சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும் என அறியப்படுகிறது.

**பாடசாலைகளில் சிறப்பாக செயற்படும் மாணவர்களின் குடும்பங்கள் கொண்டிருக்கும் இயல்புகள் :**

- நாளாந்த நேர அட்டவணை
- பிள்ளைகளின் செயற்பாடுகளை அவதானித்தல்
- கற்றல், சுய ஒழுக்கம் மற்றும் கடின உழைப்பு போன்றவற்றிற்கு உதாரணமாக இருத்தல்.
- பிள்ளைகளிடம் உயர்ந்த குறிக்கோள்களை (சாத்தியப்பாடுள்ள) நிறுவ உதவுதல்.
- பாடசாலையில் முன்னேற்றத்தை ஊக்குவித்தல்.

**Joyce Epstein இன் 6 வகையான பாடசாலை கல்வியில் பெற்றோரின் ஈடுபாட்டை விளக்கும் மாதிரி**

1. பெற்றோர்
-கல்விக்கு பொருத்தமான வீட்டுச் சூழலை ஏற்படுத்தல்
-பெற்றோருக்கு பயிற்சியளிக்கும் கருத்தரங்குகள்
-குடும்ப சுகாதார மற்றும் ஏனைய சேவைகளை மேம்படுத்தல்.

2 .தொடர்பாடல்
-வினைத்திறனான தொடர்பாடல் முறைகளை பாடசாலைக்கும் குடும்பத்திற்கும் இடையே ஏற்படுத்தல்,
-பாடசாலை நிகழ்வுகள், மாணவர் செயற்பாடு
-பெற்றோருடனான கலந்துரையாடல்கள்

3. தொண்டூழியர்
-பாடசாலையில் இடம் பெறும் நிகழ்வுகளில் உதவிகளை செய்தல்
-தொடர்ச்சியான தொடர்பைப் பேணுதல்

4. வீட்டில் கற்றல்
-பெற்றோருக்கு மாணவர் கல்வி தொடர்பான தகவல்களை வழங்குதல்
-பாடசாலை செயற்பாடுகளை பிள்ளைகளுடன் கலந்துரையாடல்

5. முடிவுகளை எடுத்தல்
-பாடசாலைகளில் சில மாணவர் செயற்பாடு தொடர்பில் முடிவு எடுக்கும் போது பெற்றோருடனும் கலந்தாலோசித்தல்.

6. சமூகத்துடன் இணைந்து செயற்படல்
-சமூகத்திலுள்ள சேவைகள், வளங்களை அடையாளம் கண்டு பயன்படுத்தல்
-சமூக செயற்பாடுகளைப் பற்றி தகவல் வழங்குதல

## ஊக்குவித்தல்

ஒரு தனி நபரிடம் ஏதோ ஒரு செயற்பாட்டுக்காக ஓர் சாதாரணமான சக்தியை மலரச்செய்து அதன் மூலம் விசேட சக்தியை உருவாக்குவதே ஊக்கலாகும்.

செல்வாக்கு செலுத்தும் காரணிகள் :

- முதிர்ச்சி
- நுண்மதி
- அவதானம்
- இணைப்பு

ஊக்கமளித்தலுக்கான நுட்ப முறைகள் :

1. புகழ்ச்சி
2. குறை
3. பரிசு
4. தண்டனை
5. போட்டி

கற்றல் நடத்தையினை மேம்படுத்தும் ஊக்கமூட்டி நுட்பங்கள் :


1. மாணவர்களுக்கு கற்றல் சார்பான விடயங்களினை யதார்த்த பூர்வமாக வழங்கல்.
2. கற்றல் விடயங்களில் மாணவர்கள் தாங்கள் விரும்பியவற்றினை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கல்.
3. மாணவர்கள் தாம் விரும்பிய கற்றல் நடத்தையினை மேம்படுத்த உதவும் மாதிரிகளினை பின்பற்றத் தூண்டல்.
4. வெகுமதிகள் வழங்கல்.
5. வகுப்பறைச் செயற்பாடுகளில் அதிகம் மாணவர்களினைப் பங்குபெறச் செய்தல்.
6. மாணவர்களின் தேவைகளினைப் பூர்த்தி செய்தல்.
7. ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகளினை கவர்ச்சிகரமானதாக்கல்.
8. கற்றல் சூழலினை சௌகரியமானதாக மாற்றல்.

# விளையாட்டு


* முழுமையான வளர்ச்சிக்கு விளையாட்டு இன்றியமையாததாகும்.
* உடல் வளர்ச்சி, புலப்பயிற்சி, படைப்பாற்றல் போன்றவற்றுடன் பொதுநலம், சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளும் விருத்தியடையும்.

## விளையாட்டு பருவங்கள்

வயது:1-2 எளிய அசைவுகள் ஓடுதல், குதித்தல்



வயது:3-6 ஆக்கத்திறன் வீடு, கட்டடம் கட்டுதல்.



வயது:3-7 நம்பிக்கை, கற்பனை பாவனை



வயது:6-11 ஒழுங்குவிதிகள்,
போட்டி மனப்பான்மை



தயாரிப்பு :
சமுதாய மற்றும் குடும்ப மருத்துவ பிரிவு
யாழ் மருத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்.

## பிள்ளைகள் கல்வியில் பின்தங்குவதற்கான காரணிகள்

| | |
|---|---|
| •நீண்ட கால காரணிகள் | பார்வை குறைபாடு, கேட்டல் குறைபாடு<br>எழுத்தறிவு குழப்பம் ( dysphasia )<br>வாசிப்பு குழப்பம் ( dyslexia )<br>மிகை இயக்கம்<br>குடும்பச் சூழல் |
| •அண்மைக் காரணிகள் | மனச் சோர்வு, களைப்பு<br>வேலைக்கு அமர்த்தல்<br>ஆசிரியர், பெற்றோருடனான முரண்பாடு<br>பாலியல் துஷ்பிரயோகம்<br>போதைமருந்து துஷ்பிரயோகம் |

விசேட தேவையுடைய பிள்ளைகள்

- மீத்திறனுடையார்
- மெதுவாக கற்போர்
- உடற்குறைபாடுடையோர்
  - பார்வை குறைபாடு
  - கேட்டல் குறைபாடு
- நெறி பிறழ்ந்த பிள்ளைகள்

ஐக்கிய நாட்டு கல்வி, விஞ்ஞான, கலாச்சார தாபனத்தின் (UNESCO) வெளியீட்டில் "குறைபாடுடைய சகல பிள்ளைகளுக்கும் கல்வியை பெற்றுக்கொள்ளும் உரிமை இருக்கின்றது. சொந்த வீட்டில் வாழ்ந்து கொண்டு பெற்றோர்களின் அன்புடனும் பாதுகாப்புடனும் தனது சமுதாய சூழலியே இப்பிள்ளைகளுக்கு கல்வியை வழங்க வேண்டும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

விசேட தேவையுடைய பிள்ளைகளின் விசேட இயல்புகளையும் அதற்கு உடந்தையாக அமையும் காரணங்களையும் விளங்கிக்கொள்ளல் (அடையாளம் காணவும், அதற்கேற்ப நடந்து கொள்ள உதவும்). இப்பிள்ளைகளுக்கு பொருத்தமான கல்வி நுட்ப முறை, ஊக்குவிக்கும் முறைகள் உண்டு.

இப்பிள்ளைகளுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கல்வி வசதிகளை அறிந்து கொள்ளல்.

- பாகுபாடற்ற முறையும், துணையான விசேட கற்றல் அறைகளும்.
- விடுதியுடன் கூடிய விசேட பாடசாலை முறை